# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24312841.*

## வழக்கு எண்.**24222**/விசாரணை/2009

<u>விசாரணை நடைபெற்ற நாள் 27.01.2010.</u>

| | |
|---|---|
| முன்னிலை: | முனைவர் (திருமதி) சாரதா நம்பி ஆரூரன்,<br>எம்.ஏ.,எம்.ஃபில்,,பி.எச்,டி.,<br>மாநில தகவல் ஆணையர் |
| மனுதாரர்: | திரு V.தங்கையா,<br>4/20, கோட்டையடித் தெரு,<br>திருநெல்வேலி டவுண் அஞ்சல்,<br>திருநெல்வேலி – 627 006. |
| பொது அதிகார அமைப்பு: | பொதுத் தகவல் அலுவலர்,<br>திருநெல்வேலி நகராட்சி,<br>திருநெல்வேலி – 627 001. |

*****

மனுதாரர் திரு V.தங்கையா மற்றும் பொதுத் தகவல் அலுவலர் திரு L.K.பாஸ்கர், உதவி ஆணையர் (பொறுப்பு), திருநெல்வேலி நகராட்சி, திருநெல்வேலி இன்று (27.01.2010) இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு வந்திருந்தனர்.

மனுதாரர் 25.07.2009 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, சட்டப் பிரிவு 6(1)–ன் கீழ் பொதுத் தகவல் அலுவலர், ஆணையர், மாநகராட்சி அலுவலகம், திருநெல்வேலி அவர்களிடம் திருநெல்வேலி மாநகராட்சியில் பணி நீக்கம் செய்யப்பட்ட 40 பணியாளர்களின் சார்பாக 8 இனங்களில் தகவல்களைக் கேட்டுள்ளார். 4 இனங்களுக்குத் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன. 4 இனங்களுக்கு உரிய தகவல்கள் வழங்கப்படவில்லை. விடுபட்ட தகவல்களை வேண்டி 26.08.2009 அன்று சட்டப் பிரிவு 19(3)–ன் கீழ்

ஆணையத்திற்கு மேல் முறையீடு செய்ததன் அடிப்படையில் வழக்கு இன்று (27.01.2010) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையில் இவ்வழக்கு இரண்டு முறை ஆணையத்தால் விசாரிக்கப்பட்டது தெரிய வருகிறது. 03.07.2009 அன்று திருநெல்வேலியிலும், 24.08.2009 அன்று நாகர்கோவிலிலும் இவ்வழக்கு விசாரிக்கப்பட்டுள்ளது. பொதுத் தகவல் அலுவலர் 8 இனங்களுக்கும் தகவல்கள் வழங்கப்பட்டதாக ஒப்புதல் வாக்குமூலம் அளித்ததன் அடிப்படையில் வழக்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

இன்றைய விசாரணையில் மனுதாரர் கேட்ட 8 இனங்களும் ஒன்றன் பின் ஒன்றாக விரிவாக விசாரிக்கப்பட்டன. திருநெல்வேலி நகராட்சியில் 1998–ம் ஆண்டு ஜுன் 13–ம் தேதி பணி நீக்கம் செய்யப்பட்ட ஊராட்சிப் பணியாளர்கள் குறித்து மனுதாரர் தகவல்களைக் கேட்டிருக்கின்றார். அரசாணை எண்.78, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 13.05.1998–ன்படி மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பஞ்சாயத்துப் பணியாளர்களில் தொகுப்பு ஊதியம் பெற்று வந்த அனைத்துப் பணியாளர்களும் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகத் தகவல் தரப்பட்டுள்ளது. இது குறித்து தீர்மானம் ஏதும் நிறைவேற்றப்படவில்லை எனவும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. 1998–ல் 40 பணியாளர்களும் 13 நாட்கள் பணி செய்ததற்கு உரிய ஊதியம் இன்றுவரை வழங்கப்படவில்லையென்றும், இது குறித்து எண்ணற்ற புகார்கள் அளித்ததாகவும் மனுதாரர் கூறினார். பொதுத் தகவல் அலுவலர் மனுதாரருக்கு உரிய காசோலை தயாராக இருப்பதாகவும், அவரை வாங்கிக்கொள்ளச் சொன்னதாகவும், மனுதாரர் வாங்கிக்கொள்ள மறுத்ததாகவும் கூறினார். 40 பணியாளர்களுக்கும் அளித்தால் தான் தன்னால் ஊதியத்தை வாங்கிக்கொள்ள முடியுமென்று மனுதாரர் விசாரணையின் போது கூறினார். உரிய காசோலைகள் தயாராக இருப்பதாகவும், ஆனால் அந்த 40 பணியாளர்களின் முகவரிகள் தங்களிடம் இல்லையென்றும் பொதுத் தகவல் அலுவலர் கூறினார். 7–வது இனத்தில் தங்களிடம் பிடித்தம் செய்த பணம் பற்றி மனுதாரர் விவரம் கேட்டுள்ளார். பிடித்தம் ஏதும் செய்யப்படவில்லையென்று பொதுத் தகவல் அலுவலர் கூறியதை மனுதாரர் ஏற்கவில்லை. இந்நிலையில் கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

1. பணி நீக்கம் செய்யப்பட்ட 40 பேரின் முகவரிகளை மனுதாரர் கண்டுபிடித்து பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பி தயாராக உள்ள தொகையைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது.
2. ஊராட்சி ஒன்றியத்தின் ஊழியர்களிடம் பணம் பிடித்தம் செய்யப்பட்டதா ? இல்லையா ? என்பது குறித்து உரிய கோப்புகளை மனுதாரருக்கு இவ்வாணை பெறப்பட்ட 15 நாட்களுக்குள் காண்பித்து, பிடித்தம் செய்யப்பட்டிருந்தால் விரைவில் அதனைப் பெற்றுத் தர உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையிடப்படுகிறது.
3. 8–வது இனத்தில் மனுதாரர் கேட்டுள்ள அரசாணை இருந்தால் அதனை மனுதாரருக்கு அளிக்க வேண்டும். அப்படி ஒரு ஆணை இல்லையென்றால் பிரமாண வாக்குமூலம் ஆணையத்திற்கு அளிக்க வேண்டுமென்று பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையிடப்படுகிறது.

**ஒப்புதல் பெறப்பட்ட நாள் 29.01.2010** **தமிழ்நாடு தகவல் ஆணையம்**
**ஆணையத்தின் ஆணைப்படி**

**(சு.மோகன தாஸ்)**
**உதவி பதிவாளர்**

பெறுநர்

**<u>வழக்கு எண்.24222/விசாரணை/2009</u>**

பொதுத் தகவல் அலுவலர்,
திருநெல்வேலி நகராட்சி,
திருநெல்வேலி – 627 001.

திரு V.தங்கையா,
4/20, கோட்டையடித் தெரு,
திருநெல்வேலி டவுண் அஞ்சல்,
திருநெல்வேலி – 627 006.

*"ptl"*